## ‘அம்ரித்பாரத்’ ரயில் நிலையங்கள் திட்டத்தில்

# தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் யாவை?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு – ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 21 -

**திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ரயில்வே துறை தொடர்பான கேள்விகளை எழுத்துபூர்வமாக மக்களவையில் கேட்டிருந்தார்.**



‘அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள்’ திட்டத்தின் கீழ் இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள், மாநில வாரியாக என்ன?

தமிழ்நாட்டில், குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

தூத்துக்குடி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் நிலை?” என்ற கேள்விகளை கனிமொழி கருணாநிதி கேட்டிருந்தார்.

இவற்றுக்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அவரது பதில் வருமாறு:-

“ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரயில்வே அமைச்சகம் ‘அம்ரித் பாரத் நிலையம்’ என்ற திட்டத்தை’ அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் நீண்ட கால அணுகுமுறையுடன் தொடர்ச்சியான செயல்பாடுகளின் அடிப்படையில் ரயில்நிலையங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ரயில் நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் மாஸ்டர் பிளான் தயாரித்து, அதை படிநிலைகளாக செயல்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கம். இதன்படி ரயில் நிலையத்தை எளிதில் அணுகுதல், பயணிகள் காத்திருப்பு அரங்குகள், கழிப்பறைகள், லிஃப்ட்கள், எஸ்கலேட்டர்கள், தூய்மையான பிளாட்ஃபார்ம், இலவச வைஃபை, அந்தந்த பகுதிகளின் உள்ளூர் தயாரிப்புகளை விற்பனை செய்ய சிறு கடைகள், பயணிகளுக்கான சிறந்த தகவல் சேவை, விஐபிகளுக்கான லாவுஞ்ச் வசதி, வணிக சந்திப்புகளுக்கான தரமான அரங்குகள் உள்ளிட்டவற்றை ரயில் நிலையங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1337 நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் தூத்துக்குடி மாவட்டத்தின் திருச்செந்தூர், கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி உட்பட 77 நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள திருச்செந்தூர், கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி ரயில் நிலையங்கள் உட்பட 71 ரயில் நிலையங்களுக்கான மேம்பாட்டுப் பணிகளுக்கான டெண்டர்கள் விடப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் ரயில் நிலையத்தில், நுழைவு வாயில், விதானம், நடைமேடை கூரைகளை மேம்படுத்துதல், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், லிஃப்ட் கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைந்த பயணிகள் தகவல் அமைப்பை யவழங்குதல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன.

புதிய காத்திருப்பு மண்டபம், தங்குமிடம், இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் நடந்துகொண்டுள்ளன.

கோவில்பட்டி ரயில் நிலையத்தில், நுழைவு வாயில், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் ஒருங்கிணைந்த பயணிகள் தகவல் அமைப்பை வழங்குதல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன.

புதிய முனைய கட்டிட கட்டுமானப் பணிகள், சாலைப் பணிகள் மேம்பாடு, இரு சக்கர வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் நடந்துகொண்டுள்ளன.

தூத்துக்குடி ரயில் நிலையத்தில், கழிப்பறைப் பிரிவு,, சுவிட்ச் அறை, வாகன நிறுத்துமிடத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நடந்துகொண்டுள்ளன.

இதேபோல மற்ற அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்ற ரயில் நிலையங்களிலும் திட்டங்கள்நல்ல வேகத்தில் செயல்படுத்தப் பட்டுள்ளன.

உதாரணமாக, மதுரை நிலையத்தில், கிழக்குப் பக்க பலநிலை இருசக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் துணை மின்நிலையத்தின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன, கிழக்குப் பக்க முனைய கட்டிடப் பணிகள், இரு பக்கங்களிலும் மல்டி லெவல் கார் பார்க்கிங், இரு முனையக் கட்டிடங்களையும் இணைக்கும் ஏர் காண்கோர்ஸ், சுரங்கப் பாதை ஆகியவை கட்டுமானப் பணியில் உள்ளன.

சென்னை எழும்பூர் நிலையத்தில், பார்சல் கட்டிடத்தின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இருபுறமும் மல்டி லெவல் கார் பார்க்கிங், காந்திஇர்வின் சாலை பக்கமுள்ள முனையக் கட்டிடம் ஆகிய பணிகள் நடந்துகொண்டுள்ளன.

சமல்பட்டி நிலையத்தில், புதிய பிரதான முனையக் கட்டிடம் மற்றும் பிரதான நுழைவு பக்க சுற்றுப் பகுதி கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மேலும் இரண்டாவது நுழைவுப் பகுதி பார்க்கிங், பிளாட்பார்ம் உயர்த்துதல், சுற்று வட்டச் சுவர் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காரைக்குடி நிலையத்தில், நடைமேடை கூரை, இருக்கை ஏற்பாடு, வாகன நிறுத்துமிடம், புதிய தாழ்வாரம், லிஃப்ட் கட்டுமானம் மற்றும் ரயில் பெட்டி அறிகுறி பலகைகள் நிறுவுதல் போன்ற பணிகள் நிறைவடைந்துள்ளன. காத்திருப்பு மண்டபம், நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களுக்கான கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. அரியலூர் மற்றும் மன்னார்குடி நிலையங்களில், புதிய நுழைவு வாயில்கள், நுழைவு மண்டபம், அணுகு சாலை, வாகன நிறுத்துமிடம், கூட்டப் பகுதி, முன்பதிவு கவுண்டர்கள், நடைமேடை மேற்பரப்பு, காத்திருப்பு மண்டபங்கள் மற்றும் நடைமேடை கூரை அமைக்கும்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரயில் நிலையங்களின் மேம்படுத்தல் என்பது பயணிகள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பை உள்ளடக்கியது.

தீயணைப்புத் துறை, மரம் வெட்டுதலுக்கு அனுமதி உள்ளிட்ட சட்ட ரீதியான பல அனுமதிகள் இப்பணிகளுக்குத் தேவைப்படுகின்றன.

மேலும் குடிநீர், கழிவுநீர் இணைப்புகள், ஆப்டிகல் ஃபைபர் கேபிள்கள், எரிவாயு குழாய் இணைப்புகள், மின்சாரம், சிக்னல் கேபிள்கள் போன்றவற்றை மாற்றும்போது சவால்கள் இருக்கின்றன.

பயணிகளுக்கு இடையூறு இன்றி, ரயில்கள் இயக்குவதற்கு இடையூறு இன்றி, தண்டவாளங்கள் மற்றும் உயர் மின்னழுத்த மின் இணைப்புகளுக்கு அருகாமையில் மேற்கொள்ளப்படும் பணிகள் என்பதால் திட்டமிட்ட நேரத்துக்குள் பணிகளை முடிக்க இயலவில்லை., எனவே இப்பணிகளை முடித்திட எந்த காலக்கெடுவையும் குறிப்பிட இயலவில்லை.

இந்திய ரயில்வேயில் நிலையங்களை தரமுயர்த்துதல், மேம்படுத்துதல் என்பது தொடர்ச்சியான செயல்முறையாகும், இது தொடர்பான பணிகள் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன, அவை முன்னுரிமை மற்றும் நிதி கிடைக்கும் தன்மைக்கு உட்பட்டவை. இருப்பினும், நிலையங்களை தரமுயர்த்துதல், மறுமேம்பாட்டிற்கான முன்னுரிமை, குறைந்த வகை நிலையங்களை விட உயர் வகை நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது.

அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ், ரயில் நிலையங்கள் மேம்படுத்துதல், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துத்தல் ஆகியவை பிளான் ஹெட் 53 ‘வாடிக்கையாளர் வசதிகள்’ இன் கீழ் நிதியொதுக்கி செயல்படுத்தப்படுகின்றன.

பிளான் ஹெட் 53 இன் கீழ் ஒதுக்கீட்டின் விவரங்கள் மண்டல ரயில்வே வாரியாக பராமரிக்கப்படுகின்றன, வேலை வாரியாகவோ அல்லது நிலைய வாரியாகவோ அல்லது மாநில வாரியாகவோ அல்ல.

தமிழ்நாடு மாநிலத்தில் தெற்கு ரயில்வே மற்றும் தென்மேற்கு ரயில்வே என இரண்டு மண்டலங்களால் ரயில்வே நிர்வகிக்கப்படுகிறது.

கடந்த மூன்று நிதியாண்டுகளிலும், நடப்பு நிதியாண்டிலும், இந்த மண்டலங்களுக்கு ரூ.4,313 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மண்டலங்களுக்கு கடந்த மூன்று நிதியாண்டுகளிலும், நடப்பு நிதியாண்டில் அக்டோபர், 2024 வரை ரூ.2,506 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது” என்று ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் ச.ராஜமாணிக்கம், மாவட்ட அமைப்பாளர் கன்னிமுத்து, துணை அமைப்பாளர்கள் முருகன், சக்திவேல் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், ஒன்றிய துணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் காளிதாஸ் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் தலைமையில் - விழுப்புரம் வடக்கு மாவட்ட

## தொண்டர் அணி சார்பில் திண்டிவனம் 15வது வார்டில் நிவாரண உதவிகள்!

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திண்டிவனம், டிச. 21-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக தொண்டர் அணி சார்பில் திண்டிவனம் 15வது வார்டில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார் .

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெஞ்சல் புயல் மழையில் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்த புயல் சேதத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் துறை சார்ந்த அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு விழுப்புரம் மாவட்டம் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதியாக தமிழக அரசு அறிவித்துள்ளது பாதிப்படைந்த வீடுகள் மற்றும் நிலங்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் 15வது வார்டில் பாதிப்படைந்த குடும்ப அனைத்து ரேஷன் கார்டு தாரர்களுக்கும் தமிழக அரசின் 2.000 ரூபாய் 5 கிலோஅரிசி சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட நிவாரண பொருட்கள் முறையாக வழங்கப்பட்டது. மேலும் திண்டிவனம்15 வது வார்டு பொது மக்களுக்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராஜசக்தி மற்றும் திண்டிவனம் நகராட்சி 15வது வார்டு கவுன்சிலர் வளர்மதி ராஜசக்தி ஆகியோர்ஏற்பாட்டில் விழுப்புரம் வடக்குமாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் செஞ்சி எம்.எல்.ஏ. மஸ்தான் கலந்து கொண்டு 750 க்கும் மேற்பட்ட மக்களுக்கு அரிசி புடவை,போர்வை, உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார்.

இதில் திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர துணைச் செயலாளர் ஓவியர் கௌதமன், மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி, ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கவுன்சிலர்

சந்திரன்,மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் சூரிய பிரகாஷ், கவுன்சிலர்கள் சுதாகர், பாஸ்கர், வழக்கறிஞர்கள் கன்னியப்பன், தமிழரசன், சலவாதி கவுன்சிலர் வேலாயுதம், நகரகழக நிர்வாகிகள் ஏழுமலை, அக்பர் பேக், பிரகாஷ், சுரேஷ், அப்சர் பேக், நரேஷ் ராஜ சக்தி, உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நாகையில்

## முரசொலி நிர்வாக மேலாளர் ஜி.இளங்கோ இறுதி ஊர்வலம்!

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், கழகத்தினர், உறவினர்கள் அஞ்சலி!

நாகை, டிச. 21 - தலைமைக் கழகப் பேச்சாளரும், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளருமான ஆடுதுறை மு.உத்திராபதியின் மைத்துனர் - முரசொலி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவின் மேலாளர் ஜி.இளங்கோ அவர்கள் கடந்த 17.12.2024 அன்று சென்னையில் மருத்துவ மனையில் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

இதையடுத்து சென்னை சூளை மேடு அண்ணா சாமி தெருவில் உள்ள அவரது வீட்டில் 17ம் தேதி இரவு வரை அஞ்சலிக்காக ஜி.இளங்கோ உடல் வைக்கப்பட்டு பின்னர் நாகை மகாலெட்சுமி நகரில் உள்ள அவரது சகோதரரான முத்துநாகலிங்கத்தின் இல்லத்திற்கு 18.12.2024 அதிகாலை கொண்டு வரப்பட்டு அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்து.

தகவல் அறிந்த நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் நசீர்அகமது, நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து,

தலைமைக் கழகப் பேச்சாளரும், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் தா.சந்திரசேகர், தலைமைக் கழகப் பேச்சாளர் நாகை நாகராஜன், மாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆர்.ஆர்.குலோத்துங்கன், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் அங்காடி சேகர், மாவட்ட கலை இலக்கிய அணி தலைவர் இரா.தங்கதுரை, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மரியதாஸ்,

முரசொலி மாவட்ட நிருபர்கள் நாகை ப.கந்தவடிவேல், திருவாரூர் ப. ஜாகிர்உசேன், தஞ்சை வி.சரவணன், புதுக்கோட்டை என்.அண்ணாதுரை, கரூர் ஜி. சொக்கலிங்கம், நாகை நகரக் கழக துணைச் செயலாளர்கள் வெற்றிலைகடைசிவா, பி.திலகர், நாகை நகர்மன்ற உறுப்பினர் சுரேஷ், திருவிடைமருதூர் ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுத்தங்குடி அ.குருமூர்த்தி அரசு, கும்பகோணம் ஒன்றியக் குழு உறுப்பினர் மாடாகுடிபாண்டியன், ஆடுதுறை ரமேஷ் மற்றும் கழகத்தினர், உறவினர்கள் ஏராளமானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

**மருத்துவமனையில் நிவேதா முருகன் அஞ்சலி!**

ஜி.இளங்கோ அவர்கள் உடலுக்கு, 17.12.2024 அன்று சென்னை கே.எம்.சி. மருத்துவமனையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் அஞ்சலி செலுத்தினார்.

நாகை மகாலெட்சுமி நகரில் இருந்து ஜி. இளங்கோ அவர்களின் இறுதி ஊர்வலம் புறப்பட்டு நாகையில் உள்ள போலீஸ் குடியிருப்பு அருகே உள்ள மயானத்தில் ஜி.இளங்கோவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா பி. தம்பித்துரை**

**டிசம்பர் 21 (1990)**



“நெல்லை இரட்டையர்கள்” என்று அழைக்கப்பட்ட இரட்டையர்களில் இவரும் ஒருவர்.

கழகத்தில் தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளை வகித்தவர்.

கண்டிகைபேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – மானூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் – திருநெல்வேலி நகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தில் உதவித் தொகையினை உயர்த்தி அரசாணை!

## முதல்வருக்கு - தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி!

### சங்க நிர்வாகிகள் அ.ஜெ.சகாயராஜ் – பா.பிரதீப்குமார் – இரா.இராம்ஜி அறிக்கை!

சென்னை, டிச. 21 -

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித்திட்டத்தில் உதவித் தொகையை உயர்த்தி அரசாணை வெளியிட்ட தமிழ்நாடு அரசுக்கு தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக “தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின்” மாநிலத் தலைவர் அ.ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி அறிக்கையில் கூறியிருப்பதாவது :

தமிழகத்தில் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மீது அக்கறையோடும் கரிசனத்தோடும் நடந்து கொள்ளும் தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் உதவித்தொகையினை அதிகரித்து அரசாணை வெளியிட்டது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது.

தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் களமாடி, உழைத்து, வெற்றி பெறச்செய்த சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் நிர்வாகிகள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளில் ஒன்றாக பத்திரிகையாளர்கள் மரணமடைந்தால் அவர்களுடைய குடும்ப த்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதியினை ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்த வேண்டும் என கோரியிருந்தனர்.

அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின்னர், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியானது, பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணி புரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.10,00,000/ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார் களேயானால் ரூ7,50,000/ வழங்கப்படும்.10 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.5,00,000/ (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போது இயற்கை எய்தி விடுவார்களேயானால் ரூ.2,50,000/ (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) என்றும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி, பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியினை உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை உழைக்கும் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தி தொடர்பு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் எங்களது “தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின்” சார்பாகவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பத்திரிகையாளர்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் .

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



புரட்சியாளர் அம்பேத்கரை இழிவுபடுத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனையின்படி பையர்நத்ததில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் அம்பேத்கார் திருஉருவச் சிலையினை கழுவி கருப்பு பேட்ச் அணிந்து கண்டன ஆர்ப்பாட்டமும்,சாலைமறியல் போராட்டமும் நடைபெற்றது.இதே போல் கம்பைநல்லூர் பேருந்து நிலையத்தின் முன்பு மொரப்பூர் ஒன்றிய செயலாளர் ரத்தினவேல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் பேரூர் கழக செயலாளர் மோகன்,பேரூராட்சி தலைவர் வடமலை முருகன்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா மோகன்தாஸ்,ஊராட்சி மன்ற தலைவர்கள் சாந்தா குப்புசாமி,திருமலா தினேஷ்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.